**செய்தி வெளியீடு எண்.11** **நாள்.25.6.2009**

**மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் மதிப்புக் கூட்டு வரி தணிக்கை நூலை வெளியிட்டார்.**

தமிழகத்தில் கடந்த 13.5.2006 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின்__தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காகவும், பல நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிகவரித் துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு அரசு புதிய தொழில்களைக் கொண்டு வருவதிலும், அவற்றை ஊக்குவிப்பதிலும் முனைப்பாக செயல்பட்டு வருகிறது. மதிப்புக் கூட்டு வரியின் பயன்கள் கருதி, பெரிய தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அண்டை மாநிலங்களுக்கு இடம் பெயர்வதை தடுப்பதற்காகவும், புதிதாகத் தொழில் தொடங்குவோரை தமிழகத்தில் தொடங்க ஊக்குவிப்பதற்காகவும், அதனால் நமது மாநில பொருளாதாரம் வளரவும், செழிக்கவும், ஏனைய மாநிலங்களோடு இணைந்து செயல்படுவதற்காகவும், மதிப்புக் கூட்டு வரி முறை தமிழ்நாட்டில் 1. 1. 2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கனவே நடைமுறையில் இருந்த தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு, வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட, வெளிப்படையான சுய வரி விதிப்பு முறையாகும். வணிக நிறுவனங்கள் இந்த வரிவிதிப்பு முறையை சீரிய முறையில் செயல்படுத்தபடுகிறதா? என்பதை அறிந்துகொள்ள தணிக்கை இன்றியமையாதது.

தணிக்கையின் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக வணிகவரித் துறையின் சார்பாக தயாரிக்கப்பட்ட “மதிப்புக் கூட்டு வரி தணிக்கை நூல்” (VAT AUDIT MANUAL)-ன் முதல் பிரதியினை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள் இன்று (25.6.2009) வெளியிட்டார். முதல் பிரதியினை வணிகவரித் துறை செயலர் பெற்றுக் கொண்டார். அப்போது வணிகவரி துறை ஆணையர் மற்றும் இதர உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

இந்த தணிக்கை நூலானது வணிகவரித் துறையினருக்கு தணிக்கை மேற்கொள்வதற்கும், மதிப்புக் கூட்டு வரி முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் பேருதவியாக இருக்கும். வணிகவரித் துறை அலுவலர்கள் எளிதாகப் புரிந்துகொண்டு செயல்பட ஏதுவான இந்நூலை வெளியிட்டுள்ள வணிகவரித்துறை அலுவலர்களுக்கு தனது பாராட்டுக்களை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துக்கொண்டார்.

---

வெளியீடு – செயலர், வணிகவரித் துறை Sd./

கூடுதல் ஆணையர் (தணிக்கை)